# இந்தியாவின்
# புதிய நாணயத்
# திட்டம்




நயா பைசா 1957௵ ஏப்ரல் 1௳ முதல்

# இந்திய சர்க்காரின் ரெவின்யு, ராணுவச் செலவின மந்திரியின்

# முன்னுரை

1957 ஏப்ரல் 1உ முதல இந்தியாவில் தசாம்ச நாணய முறையை அமலுககுக் கொண்டுவர இநதிய சாககார் தீர்மானித் திருககிறார்கள். இருநதபோதிலும், இனறுள் புழக்கததிலிருக் கும் நாணயங்களும் புதிய நாணயங்களும் 3 முதல் 4 வருடங் கள் வரை புழக்கத்தில் இருக்கும். ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் ஆகிய நாணயங்கள் மாறுதலேதும் அடையாமல இபபோதுள்ளது போலவேயிருககும். ஒரு ரூபாய் இன்றுள போல 64 காலணுக்களாகப் பிரிககப்பட்டிராமல புதிய நாணய முறையில் 100 நயா பைசாக்கள் கொண்டதாகும். ஒரு நயா பைசாவிற்கு மேல் 2, 5, 10, 50 நயா பைசாககளும் உண்டு. புதிய, பழைய நாணயங்கள் புழக்கததிலிருக்கும் இந்த இடைக் காலத்தில குழபபம் ஏறபடாமலிருக்குமபொருட்டு, புதிய நாண யங்கள் "நயா பைசா" என்று அழைககப்படும். இந்த இடைக் காலத்திறகுள் பழைய நாணயங்கள் படிபபடியாக வாபஸ் பெறப படும். இடைக காலத்திறகுப் பின் "நயா பைசா" என்றழைக்கப் படாமல் "பைசா" என்று மட்டுமே வழஙகபபடும.

பாரின் பல பாகங்களில் இநத தசாம்ச நாணய முறை கடை பிடிக்கப்படுகிறது. இந்தியாவையும் பாகிஸ்தானையும் தவிர ஆசி யாவிலுளள ஏனைய நாடுகள் அனைததும் இநத தசாம்ச நாணய முறையை நடைமுறைக்குக கொண்டுவநது விட்டன. திட்டக் கமிஷன், ராஜ்ய சர்க்கார்கள, பலவேறு கல்விக் கழகஙகள, தொழில்-வர்த்தக ஸதாபனஙகளின சேம்பர்கள் ஆகியவைகளை

யெல்லாம் கலநதாலோசித்ததில் இதில திடட வட்டமான அனு கூலங்கள இருபபதாய் தெரிநத பினபே சாக்கார் இநத தசாம்ச நாணய முறையை அமலுக்குக் கொணடுவா முடிவு செயதாாகள். ஒவவொரு தனி நபரின வாழ்க்கையையும் வழக் கங்களேயும் தொடும் நாணய முறையில் ஏறபடும் இந்த நாணய சீா திருததம் ஒரு மாபெரும் சீாதிருததமாகும. இமமாபெரும் சீர்திருததம் சீரிய முறையில் வெறறியடைய வேண்டுமாளுல் இதைபபறறியுளள பிரசனைகளேயும் நோககங்களேயும் ஒவவொரு வரும புரிநதுக்கொணடு ஆதரிகக வேண்டியது அவசியம். இந்த நாணய மாறுதலே எதிாபபாாககிறபடி மக்கள எளிதில் புரிநதுக் கொண்டு நடைமுறையில் கடைபிடிக்க தடை அகற்றும் பொருட்டு தயாரிககபபட்டதே இநத பிரசார மடல.

இப்புது நாணய முறையால் மக்கள அதிகம் இனனலுக் குள்ளாகாமல் இததுடன் தாஙகளாகவே இணஙகிப போவார்கள் எனறு பெரிதும எதிாபபார்கக்றோம. அத்துடன் இப்புது முறையை நம பரநத மனித சமுதாயமெஙகும் பரப்பிப் பரவலாககி அவர்களின வாழ்வில் கடைபிடிக்கச் செய்ய கற்றறிந்த சமுதாயத்தினா் உதவ முனவருவார்கள என்றும் நம்புகிறோம்.

நாணய மாற்றங்களே எளிய முறையில் புரிந்துக் கொள்ள பட்டியலகள் பல விநியோகிககப்படும். பழைய நாணயத் திறகுச் சமமான நாணயததைப புதிய நாணயததில் கண்டு பிடிககையில் அதில் சிறிது ஏற்ற தாழ்வு ஏற்படுவதால் அதை நாணய மாற்றுப பட்டியலில சரிககட்ட வேணடியதாகிவிட்டது. மக்களுககு—முககியமாக வருங்கால சநததிகளுக்கு நனமை அளிககபபோகும் இம்மாபெரும மாறுதலில மக்களின மன முவநத ஒத்துழைபபையும் கூட்டுறவையும் சாக்கார் எதிர்ப் பாாக்கலாம் எனறு நம்புகிறோம.

**அருண் சந்திர குகா.**

இப்போது எதை எண்ணும்போதும் ரூபாய், அணா, பை என்றுதான் எண்ணுகிறீர்கள். அவ்வாறு எண்ணுகையில் ஒரு ரூபாய் என்பது 16 அணா அல்லது 64 காலணா அல்லது 192 பைகள் என்ற அடிபபடையிலேயே கணக்கிடுகிறீர்கள். ஆனால், நம் நாணய முறை அனைவருக்கும் இன்னும் சௌகர்ய மாகவும் எளிதாகவும் சுலபமாகவும் இருக்கும்படி செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய தசாம்ச நாணயம் இந்த நோக்கங்களைப் பூர்த்தி செய்யும். தசாம்ச முறையென்றால் பத்து பதது சமபாகங் களாகக் கணக்கிடுவதே யென்று நீங்கள் நன்கு அறிவீர்கள். அப்படியே இல்லாவிட்டாலும், எண்களை எண்ணும்போது 1 முதல் 10 வரைதானே எண்ணுகிறோம். அவைகளை எழுதுமபோதும் பத்து, நூறு, ஆயிரம் . . . . . இப்படியேதான் எழுதிக் கொண்டு போகிறோம்.

புது நாணய முறையில் உங்கள் ஒரு ரூபாய் 100 சம பாகங்கள் கொண்டதாகும். இந்த ஒவ்வொரு சமபாகமும் "நயா பைசா" என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இன்றுள் ஒரு ரூபாய் நாணயம் எவ்விதத்திலும் மாறாமல் தற்சமயமுள்ள அதே மதிப்புடன் நிலையான (ஸ்டாண்டர்டு) நாணயமாயிருக்கும். ஆனால், ரூபாய் தன் மதிபபில் குறையாமலே தசாம்ச நாணய முறைப் படி 100 நயா பைசாக்கள் கொண்டதா யிருககும். 16 அணா அல்லது 64 காலணா அல்லது 192 பைகள் என்ற வகையில் இருககாது.



தசாம்ச நாணய முறையின் கீழ் செலாவணிக்கு வரும் புது நாணயங்கள்—ஒரு ரூபாய் (100 நயா பைசா), அரை ரூபாய் (50 நயா பைசா), கால் ரூபாய் (25 நயா பைசா). இவைகளைத் தவிர கால் ரூபாயகுக் குறைவாக கீழ்கண்ட நாணயங்களும் புழக் கத்திற்கு வரும்.




ரூபாயில் 10ல் ஒரு பாகம்




10 நயா பைசா.

ரூபாயில் 20ல் ஒரு பாகம்




5 நயா பைசா.

ரூபாயில் 50ல் ஒரு பாகம்




2 நயா பைசா.

ரூபாயில் 100ல் ஒரு பாகம்




1 நயா பைசா.









புதிய நாணயங்களிலுள்ள ஒரு ரூபாய், 50 நயா பைசா, 25 நயா பைசா ஆகியவைகள் பழைய நாணயங்களில் முறையே ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்களுக்கு நேர் சமமாகும். 10, 5, 2, 1 நயா பைசாக்கள் இன்னுள்ள கால் ரூபாய் மதிப்புக்குக் கீழுள்ள அணு, காலணு நாணயங்களின் ஸ்தானங்களில் செலாவணிக்கு வரும்.

1957 ஏப்ரல் 1உ முதல் இப்புது நாணயங்கள் புழக்கத்துக்கு வரும். ஆனால், ஆரம்ப காலத்தில், ஒரு நயா பைசா, 2 நயா பைசா, 5 நயா பைசா, 10 நயா பைசா நாணயங்கள் மட்டுமே 1957 ஏப்ரல் 1உ முதல் செலாவணிக்குக் கொண்டு வரப்படுமென உத்தேசிக்கப்பட்டுள்ளது. 25, 50 நயா பைசாக்களும் புதிய ரூபாயும் (100 நயா பைசா) பின்னொரு தேதியில் அமுலுக்கு வரும். அதுவரையில், புது நாணயங்களுக்கு நேர் சமமான இன்னுள்ள கால் ரூபாய், அரை ரூபாய், முழு ரூபாய் நாணயங்களே புழக்கத்தில் இருக்கும். ஏனெனில், அவைகளின் மதிப்பில் மாறுதல் எதும் கிடையாது. இன்னுள்ள அணு, காலணு நாணயங்களும் கூட குறைந்த பட்சம் 3 வருடங்களாவது புது நாணயங்களுடன் புழக்கத்தில் இருக்கும். இந்த இடைக

காலத்தில புதிய அல்லது பழைய நாணயங்கள் அல்லது இரண்டுமோ கொடுக்கவும வாங்கவும் எந்தவிதமான லேவா தேவிகளும செல்லுபடியாகும். மூன்று வருடங்களின் இறுதி யில் பழைய நாணயங்கள் அனைத்தையும் செலாவணியிலிருநது வாபஸ பெறக்கூடும் என்று நம்பப்படுகிறது.


## புதிய நாணயங்களின் புது வடிவம்

முழு ரூபாய, அரை ரூபாய், கால் ரூபாய, 1 நயா பைசா ஆகிய புது நாணயங்கள் இன்னுளில் உள்ளது போலவே வட்ட வடிவமாயிருக்கும். 10, 2 நயா பைசாக்களின் விளிமபு நெளி வுகள் கொண்டதாகவும், 5 நயா பைசா சதுர வடிவமாகவும்




காணப்படும. 100, 50, 25 நயா பைசாக்கள் நிக்கலிலும 10, 5, 2 நயா பைசாக்கள செம்பு-நிக்கல் கலவையாகவும்

(75 சத விகிதம் செம்பு, 25 சத விகிதம் நிக்கல்), ஒரு நயா பைசா வெங்கலத்திலும் செய்யப்பட்டதாயிருக்கும்.













## பழைய, புது நாணயங்களின் பரிவர்த்தனை மதிப்பு

மேல் கூறியுள்ளபடி ஒரு ரூபாய்க்கு 100 நயா பைசா; ஒரு அரை ரூபாய்க்கு 50 நயா பைசா; ஒரு கால் ரூபாய்க்கு 25 நயா பைசாக்களும் உங்களுக்குக் கிடைக்கும். கால் ரூபாய்க்குக் கீழுள்ள பழைய நாணயங்களுக்குச் சமமான புதிய நாணயங்களை எத்தனை பெறுவீர்கள் என்பதைக் கீழுள்ள அட்டவணையில் காணலாம்.

| பழைய நாணயங்கள். | | | புதிய நாணயங்கள். |
|---|---|---|---|
| 1 காலணு | | (ஒரு முறை கைமாறினால்) | 2 நயா பைசா. |
| 2 காலணு | .. | ,, | 3 ,, ,, |
| 3 காலணு | .. | ,, | 5 ,, ,, |
| 1 அணு | .. | ,, | 6 ,, ,, |
| 1 அணு 1 காலணு | .. | ,, | 8 ,, ,, |
| 1 அணு 2 காலணு | .. | ,, | 9 ,, ,, |
| 1 அணு 3 காலணு | .. | ,, | 11 ,, ,, |
| 2 அணு | .. | ,, | 12 ,, ,, |
| 2 அணு 1 காலணு | .. | ,, | 14 ,, ,, |
| 2 அணு 2 காலணு | .. | ,, | 16 ,, ,, |
| 2 அணு 3 காலணு | .. | ,, | 17 ,, ,, |
| 3 அணு | .. | ,, | 19 ,, ,, |
| 3 அணு 1 காலணு | .. | ,, | 20 ,, ,, |
| 3 அணு 2 காலணு | .. | ,, | 22 ,, ,, |
| 3 அணு 3 காலணு | .. | ,, | 23 ,, ,, |
| 4 அணு | .. | ,, | 25 ,, ,, |

நாணயங்களை நீங்கள் எண்ணும்போது, கால் ரூபாய்களில் (24 நயா பைசா) எண்ணுங்கள் ; பின் மிச்சமுள்ள நாணயங் களை மேலுள்ள பட்டியலுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். இப்படி ஒபபிட்டுப் பாாக்கும்போது, மிகக குறைந்த சில்லரை நாணயங் களில், சரியானபடி கணக்குப் பிரகாரம் கிடைக்க வேண்டிய தறகுச் சிறிது குறைவாகவோ கூடுதலாகவோ இருப்பதுபோல உங்களுக்குக் காணபபடும. ஏனெனில, புது நாணய முறையில் 1 நயா பைசாவுக்குக் குறைவாக நாணயங்கள் இல்லாக் காரணத் தால் இந்திய நாணய சட்டப்படி இவைகளை பின்னம் நீக்கி பூரிதமாக்க (ரவுண்டிங்) வேண்டியிருக்கிறது. இருப்பினும், சிறு லேவாதேவிகளின் பொருட்டு நீங்கள் எச்சமயததிலும் 4 அணு கொடுதது 25 நயா பைசாக்களாக மாற்றிக் கொள்ள லாம் என்பதும கவனிககத் தககது.

## நாணய மாற்றலில் லாப, நஷ்டம்

உண்மையைக் கூறுமிடதது, உஙகள் ஒரு ரூபாய் நாணயம் மதிப்பில குறையாது ; கூடாது. இன்றுள் போல, ஒரு ரூபாய், 16 அணு அல்லது 64 காலணு அல்லது 192 பைகள் என்று பிரிககப்படாமல, 100 நயா பைசாககள என்று மட்டுமே பிரிககப் பட்டிருககும ; இனறுள புழக்கததிலிருக்கும் 1 காலணு முதல் 2 அணு வரையிலுள்ள நாணயஙகளுக்குச் சரி சமமான தசாம சததையும், நயா பைசாவில அவைகளின மதிப்பையும் கீழுள்ள அட்டவணையில காணக :—

| தொகை விவரம் | நயா பைசாவில் அதன் சரி சமமான தசாம்சம | ஒரு லேவாதேவியின் போது கைமாறினால் நயா பைசாவில் அதன் நாணயமாற்று மதிபபு |
|---|---|---|
| 1 காலணா | 1·5626 நயா பைசா | 2 நயா பைசா |
| ½ அணா | 3·125 ,, ,, | 3 ,, ,, |
| 1 அணா | 6·25 ,, ,, | 6 ,, ,, |
| 2 அணா | 12·5 ,, ,, | 12 ,, ,, |

ஒரு பொருளை வாஙகுமபோதோ அலலது எநதவொரு லேவாதேவியினபோதோ அணா, காலணாககளாக ஒரு நாணயத் திறகுமேல கொடுகக நேரிட்டால, மொத்தத தொகைககும் சமமான நாணய மாற்றலைக கணடுபிடிக்கவேணடுமே தவிர, தனிததனி நாணயத்திறகு அலல. அணா, காலணா நாணயங களுககுச் சரி சமமான பரிவர்த்தனை மதிப்பை நயா பைசாவில் கணடுபிடிகக மேலகொடுததுள்ள பட்டியல் பெரிதும பயனபடும்.

## நாணய மாற்றுச் சாதனங்கள்

ரிஸாவ பாஙகு காரியாலயஙகள, ஸடேட் பாங்கு கிளைகள, ஏனைய ஏஜென்ஸி பாஙகுகள், கஜாணாககள், உப-கஜாணக்கள் ஆகியவை மூலம நாணயஙகளை மாறறிக கொள்ளலாம.

## நாணய மாற்றுப் பட்டியல்

நாணய மாறறுப பட்டியல உஙகளுககும மற்றவர்களுக்கும் பெரிதும பயனபடும். படிககத தெரியாதவர்களுககும் நீஙகள ஏன உதவக கூடாது? புதிய தசாம்ச நாணயஙகளின அடிப் படைத தததுவங்களை அவர்களுக்கும் கற்றுக் கொடுஙகள.

இப்போதுள்ள அணா, பை நாணயங்களுக்குச் சமமான
நிர்மானிக்க இந்த நாணய மாற்றுப்

| அணா | பை | நயா பைசா | அணா | பை | நயா பைசா |
|---|---|---|---|---|---|
| 0 | 3 | 2 | 4 | 3 | 27 |
| 0 | 6 | 3 | 4 | 6 | 28 |
| 0 | 9 | 5 | 4 | 9 | 30 |
| 1 அணா | .. | 6 | 5 அணா | .. | 31 |
| 1 | 3 | 8 | 5 | 3 | 33 |
| 1 | 6 | 9 | 5 | 6 | 34 |
| 1 | 9 | 11 | 5 | 9 | 36 |
| 2 அணா | .. | 12 | 6 அணா | .. | 37 |
| 2 | 3 | 14 | 6 | 3 | 39 |
| 2 | 6 | 16 | 6 | 6 | 41 |
| 2 | 9 | 17 | 6 | 9 | 42 |
| 3 அணா | | 19 | 7 அணா | .. | 44 |
| 3 | 3 | 20 | 7 | 3 | 45 |
| 3 | 6 | 22 | 7 | 6 | 47 |
| 3 | 9 | 23 | 7 | 9 | 48 |
| 4 அணா | . | 25 | 8 அணா | .. | 50 |

நயா பைசாக்கள் எத்தனை பெறுவீர்கள் என்பதைத் பட்டியல் உதவியாயிருக்கும்.

| அணு | பை | நயா பைசா | அணு | பை | நயா பைசா |
|---|---|---|---|---|---|
| 8 | 3 | 52 | 12 | 3 | 77 |
| 8 | 6 | 53 | 12 | 6 | 78 |
| 8 | 9 | 55 | 12 | 9 | 80 |
| 9 அணு | .. | 56 | 13 அணு | .. | 81 |
| 9 | 3 | 58 | 13 | 3 | 83 |
| 9 | 6 | 59 | 13 | 6 | 84 |
| 9 | 9 | 61 | 13 | 9 | 86 |
| 10 அணு | .. | 62 | 14 அணு | .. | 87 |
| 10 | 3 | 64 | 14 | 3 | 89 |
| 10 | 6 | 66 | 14 | 6 | 91 |
| 10 | 9 | 67 | 14 | 9 | 92 |
| 11 அணு | .. | 69 | 15 அணு | .. | 94 |
| 11 | 3 | 70 | 15 | 3 | 95 |
| 11 | 6 | 72 | 15 | 6 | 97 |
| 11 | 9 | 73 | 15 | 9 | 98 |
| 12 அணு | .. | 75 | 16 அணு | .. | 100 |

நீங்கள் உண்மையிலேயே பணம் கொடுக்கும்போது மட்டுமே இந்த நாணய மாற்றுப் பட்டியலை உபயோகிகக வேண்டும். குறிபபிட்ட ஒரு லேவாதேவியின்போது இன்னும் புழக்கததிலிருக்கும் நாணயங்களை ரொககமாகக் கொடுதது மாறற வேண்டிய சநதர்பபங்களில் அதற்குச் சமமான நயா பைசா நாணயங்களை இந்தப் பட்டியலிலிருநது கணடு கொள்ளலாம்.

பணம் கைமாறறும்போது மட்டுமே நாணய மாற்றுப பட்டியலில் குறிபபிட்டுளளது போல பின்னம் நீக்கிப் பூரிதமாககிக் கொடுக்க வேண்டும்; அதாவது $\frac{1}{2}$ நயா பைசாவும் அதறகுக் குறைவாயுள்ளதையும தள்ளிவிட்டு அதற்கு மேலுளளதையே ஒரு நயா பைசா என்று பூரிதமாககிக் கொளளவேண்டும். கணக்கிட்டுப் பார்க்கும் சந்தாபபங்களில, சமமான நாணயங்களைக் கணடுபிடிக்க 100 நயா பைசா கொண்டது ஒரு ரூபாய அலலது 16 அணு அல்லது 64 காலணு அலலது 192 பைகள் என்ற விகிதத்தில் கணிததுக கொள்ளவேண்டும்.

உதாரணமாக (1) ஒரு பெனஸில் $1\frac{1}{2}$ அணு எனற விலையில் 12 பென்ஸிலகள் வாங்குகிறீகள். கொடுக்க வேண்டிய சரியான தொகையைக கண்டு பிடிகக $1\frac{1}{2}$ அணுவை 12ஆல் பெருக்கவும; மொத்தம 1 ரூபாய் 2 அணு ஆகிறது. ஒரு ரூபாய் மதிபபில் மாறவில்லையாதலால் 1 ரூபாயைக் கொடுத்து விடுஙகள். பிறகு, நாணய மாற்றுப படடியலிலிருநது 2 அணுவுக்குச் சமமான நயா பைசா எததனையெனறு கணடு பிடியுஙகள. 12 நயா பைசா என்று தெரியவரும். எனவே, நீஙகள் கொடுக்க வேண்டிய தொகை 1 ரூபாய் 12 நயா பைசா. இதற்கு மாறுக, ஒரு பென்ஸில் விலையான $1\frac{1}{2}$ அணுவுக்கு பூரிதமாக்கிய சமமான நயா பைசாவை (9 நயா பைசா) நாணய

மாற்றுப் பட்டியலிலிருந்து கண்டுபிடித்து அதை 12ஆல் பெருக்குவது தவறு. சுருங்கக் கூறின், கொடுக்க வேண்டிய கடைசிக் கட்டத்திலேயே மொத்தத் தொகைக்கும் பூரிதமாக்கிய சமமான நயா பைசாவை நாணய மாற்றுப் பட்டியலிலிருந்து கண்டுபிடிக்க வேண்டும்.

(2) இதே போல, நீங்கள் வாங்கும் பொருள்களின் விலை அணா, காலணா என்ற அடிப்படையில் இருக்கிறது ; முதலாவதாக, கொடுத்துள்ள விலைப் பிரகாரமே கொடுக்க வேண்டிய மொத்தத் தொகையைக் கூட்டி கண்டுகொள்ளுங்கள். மொத்தத் தொகை 8 ரூபாய் 20 நயா பைசா என்று வைத்துக் கொள்வோம். இந்த 20 நயா பைசாவை நீங்கள் அணா, காலணாக்களாகக் கொடுக்க விரும்பினால், நாணய மாற்றுப் பட்டியலிலிருந்து 19 நயா பைசாவுக்குச் சமமான நாணயம் 3 அணா என்று தெரிந்து கொள்வீர்கள். எனவே, 3 அணாவைக் கொடுத்துவிட்டு மீதமுள்ள 1 நயா பைசாவை ஒரு நயா பைசாவாகவோ அல்லது ஒரு காலணாவாகவோ கொடுத்து விடுங்கள்.

---

தயாரித்தவர் : விளம்பர, காட்சிப் பிரசார டைரக்டர் காரியாலயம், செய்தி, ஒலிபரப்பு மந்திராலயம், இந்திய சர்க்கார். அச்சிட்டவர் : ஹோா அண்டு கம்பெனி, பிரிமியர் பிரஸ், சென்னை-1.

TAMIL—80,000 Copies—11-1956